மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நிதிப்பற்றுக்குறை காரணமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஓரளவு நிதி வழங்கப்பட்டது. மேலும் கொடுக்கவேண்டிய அளவுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் வசதி இல்லை. அதுபற்றி விரைவிலே முடிவெடுத்து, ஆசிரியர்களுக்குக் கிடைக்க முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 1968–69-ம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும். திரு. எம். எஸ். சிவசாமி அவர்கள் பேசுவார்கள்.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) கவன ஈர்ப்பு ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கும், வினாக்களுக்கும் உடனடியாக தகவல் அளித்தல்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த மாதிரி முக்கியமான பிரச்சினைபற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமென்று கோரினேன். கவன ஈர்ப்புத் தீர்மானமும், குறுகிய காலக் கேள்வியும் கொடுத்திருக்கிறேன். ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதுவரையிலும் ஒன்றும் வரவில்லை. சட்டத்தைக் காட்டி என்னை உட்கார வைத்து விடுகிறீர்கள். நாங்கள் தலைவருக்குக் கட்டுப்பட்டவர்கள். நாங்கள் என்னென்ன தெரிந்து கொள்ள விரும்புகிறோமோ அவற்றை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதற்கு அதிகாரிகள் காரணமா ? துரிதமாக பதில்களைப் பெறுவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? இதுபற்றி ஒரு ஏற்பாட்டைச் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கேட்பது நியாயமான கோரிக்கை, நானும் எத்தனையோ வகைகளில் உடனுக்குடன் பதில் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறேன். ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதிலாக மூன்றுக்குப் பதிலளிக்க விதியை சற்று தளர்த்திக் கொள்கிறோம். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை இங்கிருக்கும் செகரடேரியட்டுக்குள்ளேயிருந்து மட்டும் நாம் பெற்றுவிடுவதில்லை. அவற்றை மாவட்டங்களுக்கு அனுப்பி தகவல்களை வாங்க வேண்டியிருக்கிறது, துரிதப்படுத்த முயற்சி எடுத்திருக்கிறோம். திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்படும் தீர்மானத்திற்கெல்லாம் உடனே பதில் சொல்ல முடியாது. நீங்கள் கொடுப்பதை டிப்பார்ட்மெண்டில் கொடுக்கிறோம். அங்கிருந்து அறிக்கை வந்த பிறகுதான் அவையில் வைக்க முடியும். அதிகாரிகளை சீக்கிரம் கொடுங்கள் என்று உத்தரவிட சபாநாயகருக்கு அதிகாரம் இல்லை. விரைவிலே கொடுக்க முயற்சி செய்கிறோம். காலம் கடந்துபோனால், உறுப்பினர்களுக்கு தபாலில் அனுப்புவதற்குகூட வழி செய்திருக்கிறோம்.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968–69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. ச. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968–69-ம ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு மைசூர் மாநிலத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக மின்சார வாரியத்திற்கு 1 கோடியே 35 லட்சம் ரூபாய் லாபம் கிடைப்பதற்கு வகை செய்திருப்பதற்காக அரசை முதன் முதலாகப் பாராட்டுகிறேன். 1967–68-ம் ஆண்டைவிட